# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 929/2022

Prosecution Witness 2

| | | | |
|---|---|---|---|
| Name | : ரஞ்சனி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.சந்திரகுமார் | Calling | : |
| Village | : கல்லாபுரம் | Religion | : |
| Taluk | : | Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of August 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது கல்லாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். கடந்த 04.11.2022 அன்று காலை சுமார் 11.45 மணியளவில் என்னுடைய அம்மாவின் நகையை இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் பறித்துச் சென்றுவிட்டார் என்று எனது தம்பி தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். நான் உடனடியாக தோட்டத்திற்கு வந்து பார்த்தபோது எனது அம்மா உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார். அவரிடம் கேட்டபோது என்னை தள்ளிவிட்டு ஒரு பையன் நகையை பறித்துச்சென்றதாக கூறினார்.

2. சம்பவ இடத்திற்கு என் தம்பி மற்றும் என்னுடைய கணவர் வந்துவிட்டார். அக்கம் பக்கத்தினரை யாரேனும் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்றாரா என்று விசாரித்தோம். தெரியவில்லை என்று கூறினார்கள். போலீசில் புகார் கொடுத்தோம். மறுதினம் அடையாளம் காட்டுவதற்காக என்னுடைய தம்பியை வரச்சொன்னார்கள். நகையை பறித்த நபரை பிடித்துவிட்டதாக தெரிவித்தார்கள்.

3. நகையை இந்த நீதிமன்றத்தில் மனுதாக்கல செய்து எனது அம்மா பெற்றுக்கொண்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

4, புகார் கொடுத்த அன்று நானும் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். மறுதினம் என்னுடைய தம்பி மட்டும்தான் காவல் நிலையம் சென்றார் என்றும் நானும் எனது அம்மாவும் செல்லவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு நானும் எனது அம்மாவும் காவல் நிலையம் செல்லவில்லை என்றும் நகையை நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.